**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 278 / 2019**

**வ.சா.2 - முனியாண்டி** **09.12.2024**

**3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

எனக்கு சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வரவில்லை. இந்த வழக்கை யார் யார் மீது என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. என்னை சாட்சி சொல்வதற்கு 2 ம் பிரதிவாதி பாண்டி தான் என்னை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார். 2 ம் பிரதிவாதி சொன்னதன் பேரில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன். வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் வகையறாக்களுக்கு இடையே 2003 ம் ஆண்டு முதல் பாகப்பிரிவினை வழக்கு நடைபெற்று நீதிமன்றம் மூலமாக பாகப்பிரிவினை ஏற்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த பாகப்பிரிவினை வழக்கில் சாட்சியம் அளிக்க என்னை 2 ம் பிரதிவாதி பாண்டி நீதிமன்றத்திற்கு அழைத்து செல்லவில்லை. சுப்பையா சேர்வைக்கு வாரிசுகள் கருப்பணன் வெள்ளைச்சாமி கருப்பையா பாண்டி முனியாண்டி ஆகிய 5 மகன்கள் என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன். அதற்கு சுப்பையா சேர்வையின் வாரிசு சான்று பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. சுப்பையா சேர்வையின் இறப்புச்சான்றை நான் பார்க்கவில்லை. சுப்பையா சேர்வையையும் நான் பார்த்ததில்லை. உண்மையில் சுப்பையா சேர்வைக்கு இந்த 1 ம் வாதியின் கணவரும் 2 ம் வாதியின் தகப்பனாருமான கருப்பையா என்பவர் வாரிசாக இருந்திருந்தால் 2 ம் பிரதிவாதி முந்தைய வழக்கில் சொல்லியிருப்பார் என்றால் சரிதான். சுப்பையா சேர்வையின் வாரிசுகள் பற்றி எனக்கு எதுவும்

தெரியாது என்றும் 2ம் பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி

**மானாமதுரை**